உ

வேலுமயிலுந்துணை.

உடையார்பாளையம் சமஸ்தானத்தில்
முன்னிருந்த மஹாகனம்பொருந்திய மகா-ள-ள-ஸ்ரீ
கச்சியுவரங்கதுரையவர்கள் பாடிய

# நறுமலர்ப் பூங்குழனாயகிமாலை.

667
3.12

இந்த வம்சகுல திலகராகிய மஹாகனம்பொருந்திய
மகா-ள-ள-ஸ்ரீ
சமஸ்தானபதிகள்பேரில்பாடிய

# பாமாலை.

இவையை
அரண்மனைக் கம்பராமாயணப் பிரசங்க
வீரசைவக் கனகசபைக்கவிராயர்
பார்வையிட்டு

சிதம்பரம்
ஸ்ரீ குஞ்சிதசரண அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பட்டது.

1912வூ ஆகஸ்டுமீ

OFFICE OF THE ... REGISTERED 21 AUG 1912 MADRAS.
O-,194MKA2,N
N12
147069

உ

சிவமயம்.

# நறும்மலர்ப் பூங்குழல்நாயகி மாலை.

முன்னமிருந்த மகாகனப்பொருந்திய ம-ா-ா-ஸ்ரீ
சமஸ்தானபதியான கச்சியுவரெங்க காலாட்கள்
தோழமை துரையவர்களியற்றியது.

## காப்பு.

சீரெழுத்தானமலரிணைநாரன்பிற்சேர்த்துக்கட்டி
யோரெழுத்தானநறுமலர்ப்பூங்குழலுத்தமிக்கு
நீரெழுத்தன்றிதுகல்லெழுத்தென்னநிரைப்பதற்குக்
கூரெழுத்தாணியென்றோர்கோடுகொண்டவன்கூடுகவே, (1)

பூமங்கையாமங்கைவெண்மலர்மீதுபொலியுமங்கை
காமங்கையானசசிமங்கைமாறங்கைகங்கைமங்கை
சேமங்கைதந்திடுமுற்கபுரிப்பதிச்சேர்ந்திறைஞ்சு
நாமங்கைபெற்றைநறுமலர்ப்பூங்குழனாயகியே. (2)

பயறணிநாதர்வலப்பாகமேவியபைங்கொடியே
யெயிறணிபுன்னகையண்ணறங்கண்ணுக்கிடுவிருந்தோய்
கயறணியாவருநோக்கம்படைத்தகருங்கண்ணியே
நயமிகநல்குநறுமலர்ப்பூங்குழனாயகியே, (3)

மலையாவடியவர்கேட்கும்வரங்கள்வழங்குசொற்கேட்
கலையாவுன்னெஞ்சுட்பதியிலையாவெனையாதரிக்க
விலையாநீதானிங்கிலையாவுதாரவியற்கையின்றே
னலையாசொல்வாயென்னறுமலர்ப்பூங்குழனாயகியே. (4)

நீமட்டோன்மணியாகியமக்களைநேயம்வைத்தா
யாமட்டும்புத்திரனில்லாதிருப்பதழகதுவோ
சாமட்டுமேதுயர்வாரியின்மூழ்குதன்மமதோ
நாமட்டுருதநறுமலர்ப்பூங்குழனாயகியே. (5)

தாயேகருணைத்தயாநிதியேயுனைத்தஞ்சமென்ற
பேயேனைக்காக்கத்தயவிலையோவெம்பெருந்தகையே
காயேயல்லாதுகனியென்றுநம்பினன்காத்தருள்வாய்
நாயேனையென்றுநறுமலர்ப்பூங்துழனாயகியே, (6)

கன்றோடப்பசுக்குங்கோலோசுரவைப்பசுகைக்குழவி
கன்றோடப்பாய்பள்கோலோபெற்றமாதுதிருக்கண்வைத்தே
இன்றோடநீக்கியினிமைசெயாமலிருப்பதுவு
நன்றோவுனக்குநறுமலர்ப்பூங்குழனாயகியே. (7)

ஓங்காரத்துட்பொருட்குள்ளொளியாகுமுயர்வொளியே
றீங்காரமவ்வுமுவ்வுஞ்சவ்வுமென்றுநிகழ்த்தன்னையே
யாங்காரமாயெனைத்தள்ளேல்கருணையளிப்பதெல்லா
நாங்காணுமென்றநறுமலர்ப்பூங்குழனாயகியே. (8)

சிங்காரமானமடமயிலேயெஞ்சிவக்கொழுந்தின்
பங்காளியேயிமயாசலன்பெற்றபசுங்கிளியே
செங்காவியேறுமம்போருகமாமுகத்திங்கரும்பே
நங்காதலிவைநறுமலர்ப்பூங்குழனாயகியே. (9)

சனுவேயிருக்குங்கரும்பெனிற்சன்னலின்கட்டியெனிற்
பணியேயளிக்குங்குறைவின்றியேபெரும்பேறளிக்கு
மணியேயனுவளவேனுங்கொடாதவகைமையென்றே
நணியேயருளெந்நறுமலர்ப்பூங்குழனாயகியே. (10)

சொடுக்குங்கருணைமழையேவரந்தருங்கோமளமே
கடுக்கைபுனையும்பயறணிநாதர்க்குக்காதலியே
தொடுக்குந்தெய்வத்தன்மைசேர்கவிஞோர்க்குஞ்சொல்லுக்கடங்கா
நடுக்கரும்பானநறுமலர்ப்பூங்குழனாயகியே. (11)

மேயகற்புக்கணியானவர்செய்யும்விதத்தையெண்ணி
யாயமுற்றோருக்கவர்கறியைப்பயருமெனவே
நீயதுவாக்கியுமப்புகழ்நீயடையாமனின்ற
நாயகற்கீந்தைநறுமலர்ப்பூங்குழனாயகியே. (12)

மீனென்னவேமிளிர்கண்ணாயிம்முற்கபுரிவிளங்கத்
தேனென்னவேசுவைப்பாலென்னவேவாஞ்சேர்ந்தகன்றுக்
கானென்னவேவந்தளிப்பாய்வரமருளாவிடினே
நானென்னசெய்வனறுமலர்ப்பூங்குழனாயகியே. (13)

வண்ணப்பவளவல்லிக்கொடிபோன்றமரகதமே
சண்ணப்பன்போன்றன்பிலைசிவகோசரிக்காதலன்போ
லெண்ணச்செயுநன்னெறியிலையெண்ணியவெண்ணமெல்லா
நண்ணச்செய்வாயென்னறுமலர்ப்பூங்குழனாயகியே. (14)

கும்பியின்வீழுநெறியேன்கொடியன்குணமுமில்லேன்
வெம்பிவருந்துமுளத்தேன்வணங்கும்விடயமில்லேன்
சம்பிரமதுதொடுநின்றாள்பரவுந்நகையருள்வாய்
நம்பினனுன்னைநறுமலர்ப்பூங்குழனாயகியே, (15)

147069

சேயோன்றன்சாபத்தைநீத்தனைதுர்ச்சகனென்னச்செப்பும்
பேயோன்றன்னீக்கரும்பாபத்தைநீக்கினைப்பிஞ்ஞகர்க்குத்
தாயேயளிப்பதெனப்பெரும்பேரினைத்தந்ததுபோ
னாயேனுக்கீவைநறுமலர்ப்பூங்குழனாயகியே. (16)

வன்மைகொள்பார்த்தன்றனுவாற்காண்டபத்தின்வாவிதந்து
பொன்மைசொணின்னடிபோற்றக்கருணைபொழிந்தவன்றன்
றின்மைகள்யாவையுநீத்தேவிறல்கொள்செயமுந்தந்தாய்
நன்மையையீவைநறுமலர்ப்பூங்குழனாயகியே. (17)

மலமதைநீக்குஞ்செமதக்கினிப்பெயர்மாமுனிவன்
சலமதின்மேவுமண்டுகத்தைநீத்துநின்றாளிணையி
னலமுறப்போற்றன்பினாயிசம்பங்கியொன்றுக்குவித்தே
நலமுறச்செய்வைநறுமலர்ப்பூங்குழனாயகியே. (18)

மாதாவெனினற்சமாதானநின்மனம்வைக்கிலேயோ
கதாரக்கேட்கத்தகாதாதமியன்சரையுமொழி
பாதாரவிந்தநம்பாதாபயறணிப்பண்ணவனை
நாதாவெனச்சொன்னறுமலர்ப்பூங்குழனாயகியே. (19)

07194 MICA2 M12

மானேயெனப்பெருமானேநின்பாதமலரதனைத்
தானேயமிர்கண்வைத்தானேல்பொறுத்திடுமோதமியேன்
றேனேபணியவந்தேனேயருள்வைசெகமனைத்து
நானேயெனச்சொல்நறுமலர்ப்பூங்குழனாயகியே. (20)

கல்லாதவன்கண்மைக்கல்லாநினதுகனியுமுளம்
பொல்லாவிரும்புகொல்பொல்லாவயிரங்கொல்பூங்கரும்பின்
சொல்லாயெனக்கொன்றுசொல்லாயுய்யும்படித்தோகையேனு
நல்லாயருள்வைநறுமலர்ப்பூங்குழனாயகியே. (21)

மணியேயெனுங்கண்மணியேயடியர்மனத்திருக்கும்
பணியேயெனுங்கொடுமைக்குக்கெருடப்பறவையன்னாய்
பிணியேவரினுமருந்தாயெனக்கருட்பேறளிக்க
நணியேயருள்வைநறுமலர்ப்பூங்குழனாயகியே. (22)

அன்புக்கிரங்குமணியேநின்றாளுக்கடைக்கலமா
முன்புக்கிறைஞ்சுந்தமியேனைக்காக்குமுறையிலையோ
வென்புக்குளுமுருகுஞ்செயலானதெனக்கிலையே
நன்புக்கருள்வைநறுமலர்ப்பூங்குழனாயகியே. (23)

பொன்னேநவரங்கமாமணியேநன்மைபூத்திலகு
மின்னேயடியவருள்ளத்தமாகின்றமெய்ப்பொருளே
யென்னேரமுமெனைக்காக்குமுறைமையையெய்திடுவாய்
நன்னேயங்கொண்டநறுமலர்ப்பூங்குழனாயகியே. (24)

சங்கையுமாழியுமேந்தியமாலின்சகோதரியே
யெங்கையுந்தேடியுமேவரம்வேண்டுவதெய்தலின்றிப்
பங்கையெம்மையனுக்கீந்ததுபோல்வரம்பாலித்திடு
நங்கையன்றோசொன்னறுமலர்ப்பூங்குழனாயகியே. (25)

கம்பிக்குநெஞ்சினனாய்த்தமியேனின்கழற்கமலம்
சம்பத்திற்போற்றினனோவரம்வேண்டுமெனச்சரித்தே
யெம்பத்திக்கேற்றதிங்கீவேன்மறுமைக்கெனிலெனக்கு
நம்பிக்கையென்னைநறுமலர்ப்பூங்குழனாயகியே. (26)

தனந்தருவாய்கல்விகற்குமறிவொடுசொந்தமிகு
மனந்தருவாய்நின்னைப்போற்றுந்தகைக்குவண்சாதுசங்க
வினந்தருவாய்நின்றிருநோக்கம்வைக்கவிலங்குறுமா
னனந்தருவாய்நன்னறுமலர்ப்பூங்குழனாயகியே. (27)

செல்குவைபுல்லரிடத்தடையாதுதினம்பணிவோர்க்
கொல்குவைகன்றின்கறவைக்கொப்பாகவுவகைநெஞ்சின்
மல்குவைவேண்டும்வரங்களெல்லாமருள்மாரியதா
நல்குவையெங்கணறுமலர்ப்பூங்குழனாயகியே. (28)

சிந்தாமணியனையாய்மலைமன்னவன்றென்செழியன்
முந்தாம்வலையனிவர்க்குமகளென்னமுன்னம்வந்தா
யிந்தாகும்வாணுதலாயென்மகற்குப்பெண்ணென்னவந்தாய்
நந்தாவிளக்குநறுமலர்ப்பூங்குழனாயகியே. (29)

தாயகியாகியமானேசன்மார்க்கரைத்தாழ்த்திடலும்
மேயகிஞ்சித்வவறிவாளர்தம்மைமென்மேற்செயலு
மாயகிளிமொழியாட்கழகோவெங்களையன்மகிழ்
நாயகியானநறுமலர்ப்பூங்குழனாயகியே. (30]

பூவியல்மாதுங்கலைமாதுஞ்சேர்ந்துபொலியுறவே
கோவியலாக்குவைநோக்கியபோதுங்குவலையத்தின்
மேவியசெல்வமுங்கல்வியுமேவும்விழைமந்திரம்
நாவியலாக்குநறுமலர்ப்பூங்குழனாயகியே. (31)

---

கார்வாழிமிக்கவளம்வாழியாகங்கணக்கிலதாஞ்
சீர்வாழிமன்னவர்செங்கோல்மிக்கோங்கிச்செழிப்புறவே
பார்வாழிநாலுவருணத்தர்வாழிபயறணிக்கோ
னார்வாழிவாழிநறுமலர்ப்பூங்குழலுத்தமியே.

முற்றும்.

உ

சிவமயம்.

## மகாகனம்பொருந்திய ஸ்ரீ-ல-ஸ்ரீ
## குருநமசிவாயரவர்களாலியற்றியது.

வெண்பா.

எல்லாச்சிறப்புமினிதாய்ப்பொருந்துகின்ற
நல்லானெனப்பெயர்கொணுபகமே-சல்லாப
விந்திரன்போன்மிக்கசெல்வமித்தரணிமீதிலுற்றுஞ்
சந்ததமும்வாழ்குவைநீதான்.

நல்லானெனச்சொல்லுநாயகசிரோன்மணியே
தில்லைக்கடவுடிருவருளா-லெல்லவரு
மெச்சவளர்செல்வமென்மேலுமேயடைந்தே
யிச்சையுடன்வாழ்ந்துண்டிரு.

பாவிலருந்தமிழைப்பாராட்டியெப்பொழுதும்
மேவுசிவபூசைவேளையினுந்-தாவுபிறப்
பில்லாதபொற்சபையிலீசனையுங்கச்சிவரு
நல்லானையுமறவேனுன்.

ம-ள-ள-ஸ்ரீ சின்னநல்லானென்னுந்துரையவர்கள்
குருவின்மேல்பாடியது.

நன்னூலுங்காரிகையுநன்றுந்திவாகரமும்
பன்னூலுமாராய்ந்துபார்ப்பதேன்-முன்னூலுங்
கொண்டாடுந்தில்லைக்குருநமச்சிவாயர்முகங்
கண்டாலுமுண்டேகதி.

கீதம்பரதங்கிளர்விகலைக்யானம்
வேதம்பரிமளிக்கவீசுமே-கீதங்
கொழுந்திருக்குந்தில்லைக்குருநமச்சிவாயர்
தழைந்திருக்குமாஸ்தானந்தான்.

சேவிலுயரம்பலவர்சேவடிக்குச்செந்தமிழாய்ப்
பாவிலுயர்பூணைப்பணித்ததே-வாவிதொறுஞ்

சேலாக்கண்மேவிடருந்தென்கச்சிசின்னநல்ல
காலாக்கள்தோழன்கவி.

சின்னநல்லானென்னுந் துரையவர்களுக்கு நடேசர்
நடன தெரிசனங் காண்பித்தது.

அம்பலவாவின்றொருக்காலாடினாற்றாழ்வாமோ
வம்பரெலாங்கண்டதெனக்கொப்பாமோ—சம்புவே
வெற்றிப்பதஞ்சலிக்கும்வெம்புலிக்குந்தித்தியென
ஒற்றுப்பதஞ்சலிக்குமோ.

தூக்கிபகானோகாதோதிட்டன்முயலகன்மே
ருக்கியகாருனுஞ்சலியாதோ—வாக்கா
தினவரதாதில்லைத்திருத்தாண்டவாநீ
அனவரதங்கூத்தாடினால்.

சொன்னபணிவிடைகேழ்க்கக்காலாக்கக்தோழன்சோலைசூழ் கச்சியில்வாழ்துரைகள்வேந்தன், சின்னநல்லநாயகனைத்தந்தோமென்றுதிருவுளஞ்செய்தீரடியேன்சிறுமைதீர்ந்தேன்; மன்னுபுகழருணகிரி நமச்சிவாயன்வாழ்வாக யான்வாழ்க வந்தவாழ்வே அன்னமிடுசூடகக்கையன்னங்காணவம்பலத்தே நின்றுநடமாடுவீரே.

தென்னருணைமருவுதுறைநமச்சிவாயதேவனருள்குருநமசிவாயதேவன், மன்னுபுகழ்புலியூரம்பலத்தில்வாழும்வள்ளலுச்சிக்காலக்கட்டளைக்குவாய்ப்ப, விங்கிலமெலாம்புகழுமரசூர்ப்பத்தினிளங்கம்பூர்சாதனக்கல்லெழுதிநாட்டி, நன்னெறிசேர் காலாக்கடோழன்சின்னநல்லானென்றிடுதுரையேநடத்தினனே

உ

சிவமயம்.

# உடையார்பாளையம் ஸமஸ்தானம்

மகாகனம்பொருந்திய ம-ா-ா-ஸ்ரீ

முந்தியகச்சியுவரெங்ககாலாக்கள் தோழஉடையாரான

## துரையவர்கள்பேரில் பாடிய பாட்ல்..

### வெண்பா.

கச்சியுவரெங்கன் காவேரியந்தரெங்க
னிச்சகத்திலென்றுமிருரெங்கன்-மெச்சுறவே
யிந்தரங்கன்யாவரையும்ரெட்சிப்பானென்றுசொல்லி
யந்தரங்கன்கண்ணுறங்கினான்.

கன்னன் கொடுத்தபசுக்கிடையுங் கடவுள்கொடுத்த திருவோடுந், தென்னன்கொடுத்த மணிவீடுஞ் சேரன்கொடுத்த பொன்னாடு, மன்னன்கச்சியுவரெங்கன்வாவாவென்றுபஞ்சத்திலன்னங்கொடுத்தகொடைக்குநிகரான்றுமென்றுமில்லையே. (1)

சந்திரன்வீசங்குமுண்ணரைக்காற்றாதா, சவிதாவின்கான்முளையேகாற்றாதாவா, மிங்தெனும்வாணுதலாடன்பாகத்தெம்மா, னீசனுமேயரைத்தாதாவென்னலாகும், வந்திரக்குமுகுந்தனுக்கீமுக்காற்றாதா, மாபெவியேயெனப்பெரியோர்வழங்குவார்கு; ளிந்திரனுங்கச்சியுவரொங்கமன்ன, னென்றுமுழுத்தாதாவென்றியம்பலாமே. (2)

வரைகளிலேபெரியவரைமஹாமேருவரையென்றுமன்னிப்பார்கள், தரைகளிலேபெரியதரைதென்சோழமண்டலத்தைச்சாற்றுவார்க; ளுரைகளிலேபெரியவுரைகம்பராமாயணத்தினுரையதாகுங், துரைகளிலேபெரியதுரைகச்சியுவரெங்கனெனச்சொல்லலாமே. (3)

### கலித்துறை.

ஒரு வித்துவான் கலியாணஞ் செய்துகொள்வதற்குப்பாடியது.

தேமிக்கநின்றுணைகொண்டோர்கனிகைச்செறிவதற்காய்
நாமொய்த்ததண்பொழில்சுற்றினமிவ்வரைநாட்கள்பல

தாமித்ததக்கனிநின்றலைடையத்தயவுசெய்வாய்
தாமொப்பக்கச்சியுவரெங்கனென்னுந்தயாநிதியே. (4)

இன்னும் இந்தத்துரையவர்கள் பேரில் ஏற்பட்டிருக்கிற பதங்களையும் அவனியப்பதங்களையும் எழுதச் சாத்தியமில்லை.

மகர்கனம்பொருந்திய மகா-ா-ா-ஸ்ரீ கச்சிரெங்க காலாட்கள்
தோழஉடையாரான துரையவர்கள்பேரில் வாலைசரஸ்வதி
சுப்பிரமண்யக்கவிச்சக்ரவர்த்தி பாடியபாடல்.

சீட்டுக்கவி.

திடமிகுத்ரிகடவிகடதடசெவிகளாடர்திதலைசெறிசிந்துரானனத்தன், சிந்தைமகிழ்தன்றுணைவனனசரவணபவன்றிருவருள்வரப்ரசாதன், சீலமிதவீராகமச்சைவசேகரன்செகராஜஞ்சபைமெய்த்திடச், செந்தமிழ்க்கவிமாரிபொழியுமேகனெதிர்த்திடுபுலவசிம்மசரப, மடலவிழும்வனசமலர்வாணிபீடாசனன், வாகைமிகுமோகவசனன், வண்டமிழ்க்குதவாதலுத்தப்பிசாசர்மேல்வசைசொல்கவிகாளமேகம்; வடசொலின்பாரதத்தாதிபைத்தென்சொலின்வழுத்திஞென்வம்ஸதிலகன், வாலைசரஸ்வதிசுப்ரமணியக்கவிச்சக்ரவர்த்திவரவிட்டநிருபங்; கடலதிரபுவிகிடுகிடெனவுடைபடவடவைகனல்சிதறமிகுமரியலர், களைத்திரட்டிச்சிரத்தைத்தறித்துக்கழுக்கட்கிரைகொடுத்துவெற்றி, கட்டத்துஜங்கட்டியட்டதிக்கரசர்நிதி கட்டவொப்பஞ்செலுத்துங், கச்சிரெங்கேந்த்ரதுரைகாலாட்கள்தோழசேகரச்ரீடியினிதுகாண்க, வடவரைகுமாரிபயறணிநாதர்பாரிநறுமலர்ப்பூங்குழற்கௌரிமேல், மாலைப்ரபந்தநின்பாலருட்புரியவும்வழுத்தினேழுமதுகொலுவா, மஹாராஜர்சபைமுன்ப்ரசங்கஞ்செய்திட்வென்னைவரவழைக்கும்படிக்குன், வனசமலர்வாய்மலர்ந்துத்தாரமதுசெய்யமனமகிழ்ந்திடவேண்டுமே. (5)

பஞ்சலக்ஷணகாவியத்தினற்கவிதையிற்பகர்முத்தமிழ்ப்ரபந்த,பாரகாவியமெலாஞ்சொல்லும்ப்ரபலவாக்கிபலகற்பனைப்பொக்கிஷம், பனுவலாட்டிக்கிதயபீடாசனன்பாரதத்தாதியுரைசெய்வம்சன், படப்படென்றெதிரிட்டகவிஞரையெலாந்துகள்படப்படத்தாக்கும்வாக்கன், வஞ்சகர்க்கிடியேறுஅரிஹரப்பிரமாதிவல்லபமிகுந்தசுகுணன், மாருதவிட்டலிங்காபரணவீர

கமச்சைவதெய்வபுருடன், மண்டலாதிபர்கள்சபைமெய்க்கப்ப்ரசங்கமிகுமதுரகவிபொழியுமேகம், வாலைசரஸ்வதிசுப்ரமணியக்கவிச்சக்ரவர்த்திவரவிட்டபிருபம், கஞ்சமலர்முகலளிதரஞ்சிதல்பயறண்ணிக்கடவுளர்சமஸ்தானமால்; கற்றவர்க்கருண்முத்துவிஜயரெங்கேந்த்ரனுங்காத்ரனெனவளர்பார்த்திபன், சனகசிம்மாசனக்கிரீடாதிபதியரசர்கப்பமிடும்வளர்நரபதி; கச்சிரெங்கேந்த்ரனுங்காலாட்கள் தோழ்மைசேகரபதியினிதுகாண்கத், தஞ்சமென்றோருக்குஞ் சங்கீதசாயுத்யந்தன்னையுரைநாவலர்க்குந்; தந்தநின்முதாதையம்சநீயாமெனச்சகமுனைப்புகழ்தலாலுன், சமுகமதுதேடிவருமெமதுதமிழைக்கண்டுசால்வைமுதலானவஸ்திரந், தனகனகபூஷணமும்வாகனாதிகளுடன்றந்தனுப்பிடவேண்டுமே. (6)

வனசமலர்வாணிபீடாசனனெனுஞ்சரவணோற்பவன்வரப்ரசாதன், வந்தெதிர்த்திடுபுலவகண்டீரவச்சரபமருவுகவிவலர்சேகரன்; மண்டலாதிபர்கள்சபைமெய்க்கும்ப்ரசங்கமிடுமதுரகவிபொழியுமேகம்; வாலைசரஸ்வதிசுப்ரமணியக்கவிச்சக்ரவர்த்திவரவிட்டபிருபங், கனசமுகபதிவீரசிம்மாசனாதிபதிகனககிரீடாதிபதிகூ, காபதிக்கேபதிப்பூபதிக்கோபதிக்கல்வியிற்பிரஹஸ்பதி; கலாநிதிபதிக்கனல்குலாதிபதிநிதிபதிகள்கப்பமிடும்வளர்நரபதி, கச்சிரெங்கேந்த்ரதுரைகாலாட்கள்தோழ்மைசேகரபதியினிதுகாண்க: சனமானதுரையென்றுனைப்புகழ்தலாற்கவிஞர்சாதுரியமுந்தெரிதலாற், றனகன்னவுதாரப்ப்ரபலனென்றுன்மேற்றொனெமுகமுந்திரிபெனத், தமிழ்முதற்பாவிருத்தங்கவிமருட்பாசரஸக்கட்டளைக்கலிப்பா, தருபதஞ்சீட்டுக்கவிதைநறுமலர்க்குழற்றாய்மாலையெனவுரைத்தே, னெனதருமைகண்டுநீதுரைகட்டுவர்க்கத்தினிற்சோமனுத்தரீயம், இயலானசோடுசாலுவைபாகைநாலுநகையென்றவெகுமதியுமுமது; இஸ்திமீராக்ராமமுழுதுக்குமேர்க்குறுணியிருபதின்காணிமான்ய: மேலுபரிவாகனஞ்சதமெனும்பொன்னிவைகளீந்தனுப்பிடவேண்டுமே. (7)

கலித்துறை.

தார்கொடுத்தார்தந்தலைகொடுத்தார்தண்டிகைசுமந்தா
ரூர்கொடுத்தாருயிர்மீண்டெழுந்தார்காலுதைபெறவே

மார்கொடுத்தாரிவரென்றைறக்குமாறுமல்வாழ்ந்திருமென்
றூர்கொடுத்தாரெங்கள்கச்சிரெங்கேந்த்ரனுக்காமென்னவே.

147069

இவ்வித்துவான் உத்தரவின்மேல் போய்
வந்தவுடன் பாடியது.

வீணாளர்கோடியிருந்தாவதென்னவிலட்சணத்தால்
மாணார்தமைத்தினங்காண்கிலென்னுங்சருமாமுகில்போற
கோணாதவள்ளலெனுங்கச்சிரங்கக்குமுணன்முகங்
காணாதகண்சித்திரப்பாவைதன்னிருகண்ணொக்குமே. (9)

ஈணாவைப்போலவிரங்காதபேரைக்கண்டென்னபல
னுணாமல்வேண்டிப்பொருள்களுண்டாமெனநாடிவந்து
கோணாதவள்ளலெனுங்கச்சிரங்கக்குமுணன்முகங்
காணாதகண்சித்திரப்பாவைதன்னிருகண்ணொக்குமே. (10)

விண்டாவுபாற்கரற்கண்டேமுளரிவிகசித்திடும்
வண்டார்வுசோமனைக்கண்டேகுமுதமலர்தருமால்
தண்டார்புயக்கச்சிரெங்கமகிபதிதன்முகத்தைக்
கண்டால்மலரும்புலவோரிதயகமலங்களே. (11)

மாதாவைப்போலிவ்வுலகினைக்காத்திடவந்தமன்னன் [ய்
தாதாவல்லான்மற்றும்வேறுமுண்டோவென்முன்சாற்றிடுவா
மூதாதையென்றிடுங்கச்சிரெங்கேந்திரன்முன்னடைந்தோர்க்
கேதாகினுங்குறையுண்டோவதனையியம்புகவே. (12)

கல்லாதவரிடஞ்செல்லாதுவாழக்கனகமழை
சல்லாபமாகப்பொழிந்திடவந்ததயாநிதியா
மல்லார்திணிபுயக்கச்சிரெங்கேந்த்ரவரோதயமா
னல்லார்க்குமற்றவரெல்லார்க்குமேமிகநல்லவனே. (13)

மாலேந்துசேயர்பயறணிநாதர்மனமுகந்த
வேலேந்துகண்ணிநறுமலர்ப்பூங்குழல்மெல்லிகல்லாள்
காலேந்திமள்ளர்தொழுதேத்தச்சிம்மாசனத்தின்கட்செங்
கோலேந்துமெங்கச்சிரெங்கேந்த்ரனென்னுங்குணதுங்கனே. ( )

முடிதாங்குமன்னவர்மூவரும்யாவருமூதுலகிற்
கொடிதாங்குகம்பர்முதலானவர்க்குக்குலம்விளங்கப்
படிதாங்குமானியந்தந்ததுண்டோமிகப்பாலித்தென்றன்
குடிதாங்கியாதரித்தான்கச்சிரெங்கக்குலதுங்கனே. (15)

வெண்பா.

இச்சையுடன்வந்தோர்க்கிருநிதியந்தானளிக்க
வச்சமறவேயிருந்தார்சொல்வார்—மெச்சுறவே
கச்சிரெங்கனென்றுரைக்குங்கன்றாவுதாணைப்போ (16)
விச்செகத்திலீடேதினி.

பூமிபுகழ்கச்சிரெங்கபுரவலநின்னாட்டில்வரும் போதொன்
றின்பால்; வாமமுறுமயிலொன்றுமன்னமொன்றஞ்சிங்கமொ
ன்றுமானிரண்டு, மாமைமிகுசக்கரப்புள்ளிரண்டுடனேசெண்
டைரெண்டுவராலிரண்டோ டாமைரெண்டுநண்டிரண்டுகண்டுவ
ந்தேனிப்புதுமையறைவதானே. (17)

விருத்தம்.

நற்சங்கப்பயிர்விளங்கத்துற்சங்கக்களைபறித்துநன்றேசெ
ய்யுஞ், சற்சன்னர்விவேகியென்றும்புகழ்நிலவையொத்ததென்
னுந்தரணிமன்னன், பொற்சிலையாமேருமுதலிமசேதுபரியந்தம்
புகழ்மையோங்குஞ்,சொற்சிங்கவரதுங்ககச்சிரெங்கநின்புகழெ
ன்சொல்லற்பாற்றே. (18)

திருவிளங்குமணிமார்பனிருபதாம்புயமலரைத்தியானித்
தேத்துந்; தருவிளங்குங்கான்முத்துவிஜயரெங்கத்தராதிபன்ற
ன்றவத்தால்வந்தோ, னுருவிளங்குங்கீர்த்திபெற்றவுடையார்
பாளையமமர்ந்தேயுலகம்போற்று,மருவிளங்குமலர்மார்பனென்
றகச்சிரெங்கனெங்கள்வரிசைமாலே. [19]

திக்கெட்டும்வளரும்வகைக்கொழுந்தோடிப்படர்கீர்த்திச்
செங்கோலோச்சி, யிக்கட்டுவந்தவர்கள்ரெங்கவிலாசக்கட்டிலி
ருந்திசைக்கி; னெற்கட்டும்பணக்கட்டுமரகதத்தின்கட்டுமணி
க்கட்டுநேரே, பொற்கட்டுந்தந்தருள்வன்கச்சிரெங்கநாதனெ
னும்புனிதவேளே. (20)

முத்தனையேகைக்கொண்டமதனனெனத்திருவுருவமுழுதும்
பெற்றே,கைத்தனுவைக்கொண்டரகுராமனெனுங்கச்சிரெங்க
க்காவலோய்கே, ணத்தனையேபொருவுமுத்துவிசையரெங்கபூ
பாலசுரேந்திரன்று; னெத்தனைநாட்டவமிருந்தானின்னைமகவெ
ன்னப்பெற்றெடுக்கத்தானே (21)

சித்தநைந்தேநாலுமகமியற்றியவன்மகவானுச்சிறந்திருப்
ப, னித்தனையென்றெண்ணமுடியாப்பாளையத்தினையிங்கியைந்
துநின்றுப், சித்தமகிழ்கச்சிரெங்கமகிபவுடையார்பாளையத்தை
ச்சேர; வெத்தனையாகம்புரிந்தாயிந்திரனுக்கிந்திரனுயிருக்கத்தா
னே. (22)

வழிவழியாய்வாழையடிவாழையாய்வந்தவர்க்குமகிமையு
ண்டு. வழிவழியாவாராதாரென்னசெல்வமிருந்தாலுமதிப்புண்
டேயோ, வழிவழியாய்வன்யகுலம்விளக்குமுத்துவிசையரெங்க
மகிபனுக்கு, வழிவழிசேர்கச்சிரெங்கமகிபவுனக்கிணையாமோ
வழங்கத்தானே. (23)

### இவ்வித்துவான் ஊருக்குப்போய் வந்தபோதுபாடியது.

### கட்டளைக்கலிப்பா.

தோணிக்கண்காணவாலைசரஸ்பதிசுப்ரமண்யக்கவிச்சக்ர
வர்த்திசொல், பேணிக்கட்டளையாஞ்சரசத்தையுன்பேரிலிங்கி
தஞ்செய்துந்தம்பேட்டிக்கு, மாணிக்கமுத்துமாலைநடுவினில்
வைத்தரெண்டெலுமிச்சம்பழத்துடன், காணிக்கைக்கொண்டு
வந்தாள்பாருமையாகச்சிரெங்கப்பக்காலாக்கள்தோழனே (24)

மூத்தமாமிபாள்வம்பிகொழுந்தனுர்மோசக்காரன்புருஷ
ன்பொல்லாதவ, னத்திமார்கொடுநீலியென்றேப்படிராஜர்மெ
ச்சுஞ்சண்டைக்காரிகேலியாங், கூத்திமாரெனவேபரியாசஞ்சூ
றியேமிதம்வந்தென்றன்வீட்டினிற், காத்திருக்கிறீரேசமுசாரி
நான்கச்சிரெங்கப்பகாலாக்கள்தோழனே. (25)

வேசியாசையும்வியாபாரிநேசமும்விகிதமோசதமோநெடு
நாளைக்கு, வாசமாகவிருப்பதுண்டோகிண்ணமாற்றிடுமுனொரு
கதையல்லவோ, சிசிதாசிகடன்னுறவாகுமோசேரும்போதினி

ல்மற்றொருவர்வந்து; காசுதாரேனென்றாற்போய்மருவுவர்கச்சி
ரெங்கப்பக்காலாட்கள்தோழனே, (26)

தலையுந்தாளுமுரமுந்தழுவுவர் சந்தனத்தினொடுத்தரைபூசு
வர், முலைநெகிழ்த்துவர்காட்டுவர்மூடுவர்முத்தந்தந்துமுயங்கி
த்தழுவுவர், நிலைநிலாதிறைநின்றதுபோலவேநேர்ந்தசெல்வங்
கொண்டேதுறவீகுவர், விலையின்மாதர்விழலினுக்கொப்பரேவி
ரும்புலாய்க்கச்சிரெங்கப்பவேந்தனே. (27)

வெண்பா.

தேசமன்னர்வாசற்றெருக்கதவுங்கச்சிரெங்க
ராசன்முகிறன்னரண்மனைக்கதவும்—காசினியி
லேத்தும்புலவரைக்கண்டெப்போதினுக்குமவை
சாத்துந்திறக்குமிதுதான். (28)

கச்சிரெங்கசாமிப்பேர்காலாட்கள்தோழனெனும்
வச்சிரதேகம்படைத்தவள்ளலே—யிச்செகத்திற்
சந்ததிபெற்றோங்கித்தரணிச்செங்கோலோச்சி
சந்ததமும்வாழ்கதழைந்து. (29]

எல்லாவிருதுமினிதாகவேபெற்ற
நல்லான்போல்வாழ்கின்றநாயகனே—கல்வியுறு
கச்சிரெங்கசாமியெனுங்காலாட்கள்தோழாநீ
வச்சிரதேகம்பெற்றுவாழ். (30)

எல்லாவறமுமியற்றிப்புகழ்கொண்டு
வல்லாண்மைமிக்குற்றமன்னவனே—பல்லூழி
கச்சிரெங்கசாமியெனுங்காலாட்கள்தோழாநீ
வச்சிரதேகம்பெற்றுவாழ். (31)

சாந்தமதையுரைத்துந்தன்மணத்தைவீசுதல்போல்
சாந்தகுணமேதணவாம—லேய்ந்தனைநீ
கச்சிரெங்கசாமியெனுங்காலாட்கள்தோழாநீ
வச்சிரதேகம்பெற்றுவாழ். (32)

வில்லுக்கருச்சுனன்போல்வெற்றிக்குவிக்ரமன்போல்
சொல்லுக்கரிச்சந்திரதூயவன்போல்—வல்லமைசேர்

கச்சிரெங்கசாமியெனுங்காலாட்கள்தோழாநீ
வச்சிரதேகம்பெற்றுவாழ். (33)

பாட்டனைப்போலும்பகுத்தபுகழ்பெறவே
தேட்டந்தவெங்கள்சிகாமணியே-நீட்டிய
கச்சிரெங்கசாமியெனுங்காலாட்கள்தோழாநீ
வச்சிரதேகம்பெற்றுவாழ், (34)

மார்க்கண்டனைப்போலவாழும்வயதுமிகத்
தீர்க்கமாய்பெற்றசிகாமணியே-பார்க்குள்மிகு
கச்சிரெங்கசாமியெனுங்காலாட்கள்தோழாநீ
வச்சிரதேகம்பெற்றுவாழ். (35)

ஈந்தேகடப்பாயிரவலரென்னுங்கடலைத்
தோய்ந்தேகடப்பாய்சுகவாழ்வை-யாய்ந்தமைந்த
கச்சிரெங்கசாமியெனுங்காலாட்கள்தோழாநீ
வச்சிரதேகம்பெற்றுவாழ். (36)

உன்மாவலிகொடுத்ததோரடிதானேயென்று
பன்மானியமெவர்க்கும்பாலிப்பாய்-நன்னயமாய்
கச்சிரெங்கசாமியெனுங்காலாட்கள்தோழாநீ
வச்சிரதேகம்பெற்றுவாழ் (37)

பொன்னேகொடுத்தயுவரெங்கன்போற்புகலப்
பின்னேயுனையன்றிப்பேசுவரோ-சொன்னேன்காண்
கச்சிரெங்கசாமியெனுங்காலாட்கள்தோழாநீ
வச்சிரதேகம்பெற்றுவாழ். (38)

ஓர்சாமமன்றிமறுசாமத்துதவினனே
போர்மேவுகன்னனுனைப்போலவே-சீர்மேவு
கச்சிரெங்கசாமியெனுங்காலாட்கள்தோழாநீ
வச்சிரதேகம்பெற்றுவாழ். (39)

பாட்டின்பயனறியான்பாடல்பெருங்கீர்த்திபெறுன்
ஆட்டினதயொன்றுரைக்குமவ்வைசொலைக்கேட்டிலையோ

கச்சிரெங்கசாமியெனுங்காலாட்கள்தோழாநீ
வச்சிரதேகம்பெற்றுவாழ். (40)

கல்லாடமேமுதலாய்கற்றுணர்ந்தாய்கல்விபெற்றோர்
பல்லாடக்கூடுமோபார்வேந்தே—சொல்லோடுங்
கச்சிரெங்கசாமியெனுங்காலாட்கள்தோழாநீ
வச்சிரதேகம்பெற்றுவாழ். (41)

மாதர்சுகத்தைமருவுமதனனெனப்
பூதலத்தில்வாழும்புரவலனே—காதல்கொளுங்
கச்சிரெங்கசாமியெனுங்காலாட்கள்தோழாநீ
வச்சிரதேகம்பெற்றுவாழ் (42)

கல்லாக்கலையனைத்துங்கற்றுணர்ந்துபேறுபெற்ற
நல்லானெனச்சொல்லுநாயகனே—வல்லாண்மைக்
கச்சிரெங்கனென்னவந்தகாலாட்கள்தோழாநீ
வச்சிரதேகம்பெற்றுவாழ் (43)

டை துரையவர்கள்குமாரன் பெரியசாமியென்னும் மஹா-ா-ா-ஸ்ரீ
முத்துவிஜயரெங்கப்ப காலாட்கள்தோழரென்னுந் துரையவர்கள்பேரில்
வாலசரஸ்வதி சுப்பிரமணியக் கவிச்சக்ரவர்த்தி பாடியபாடல்.

## விருத்தம்.

தங்கமஹமேருவோமன்மதகிரீடமோசக்ரவாகத்தினிணையோ, தமனியக்கலசமோகூவிளங்கனியதோதண்ணெனுங்குமிழினிணையோ, துங்கமதவாரணயின்கும்பமோமாதளந்துய்யபழமோபரணியோ, சுத்தநவரத்னவொளிர்கந்துகத்திணையதோசோடானவிளநீர்களோ, பொங்கமிர்தகும்பமோசப்பிரமோகளபபுளகமணமீறுசெண்டோ, பூவின்றிமீதெழுங்கொடியொன்றின்மேல்ரெண்டுபூவென்றரும்பிநிற்குஞ்; செங்கமலமோவெனுங்கொங்கைமங்கையர்மதனதீரரணசூரஹாரா, செயகச்சிவளர்முத்துவிஜயரெங்கப்பபலசிம்மாசனதிபதியே. (44]

உன்பிதாக்கச்சிரெங்கேந்த்ரனேதயாதனுனதுதாய்மார்மூவரும்; உரிமைசேர்ந்திடுகின்றகௌசலைகைகைசுமித்திரையாகுமுனது, தம்பிமார்மூவரும்பாதசத்துருக்கனிலக்குமன்றன்னிகராம்வலவர்தாஞ், சனகராசேந்திரனுனதுமாமன்விஜயஒப்பி

லாமழவராயன், அன்பினில்மிகுந்தேவிசானகியாகுமுன்லவனுனதுசெல்வனுவான், அருகுளோரங்கதன்சாம்பவன்சுக்ரீவனனுயாருமாதலாலே, தென்புதிறைராமாவதாரநீமகுடாபிஷேகபதியென்னவந்தாய், செயகச்சிவளர்முத்துவிஜயரெங்கப்ரபலசிம்மாசனுதிபதியே. (45)

பங்கயவரும்பிணையிலாதுபங்கப்படப்பம்பரங்கண்டுசுழலப்பைம்பொனின்ரும்பம்பயப்படப்பூஞ்சிமிட்பாரினிற்கடைபட்டிடப், பசியதேங்கின்குரும்பைகள்வெட்கியுதிரவேபாரியினீர்வெட்டுணப் பந்துநிகரன்றியடிபிடிபடப்புற்புதம்பருமிதங்கண்டுமறையத், தங்கமஹாமேருமுகநோக்கிவலையச்சூதர்வென்றியாரும்வெட்டத், தாளந்தகாதெனத்தட்டமணிமுடியதின்சமதையன்றெனவிலைபடச் சக்ரவாளப்பொருந்தாதுசிறைபடவானைதன்கொம்படாதொடிபடத், தான்வீறுகொண்டுயின்னிடைவருந்திப்புனுகுசந்தங்கமழ்ந்தவாடை யெங்கணும்பரிமளித்திடமார்பினிடமேலாமிழைபுகாமற்பரந்தே, யிடங்கொண்டடர்ந்தேதிரண்டுவிம்மிப்படர்ந்தெழிறேமலைப்பெற்றுமே யிணையேதெனப் புகலவண்ணுந்தனைத்தேயெதிர்த்தவர்களைக்குத்தியே, யிறுமாந்திருந்தகொங்கையின்மங்கமாரெலாமேத்தியுனையேயிறைஞ்சி, செங்கமலமுகநோக்கியெங்களைச்சார்ந்துநின்றிண்புயத்தாற்றழுவியே தீரணசூரசெம்பீரவொய்யாரமிகுதிறமிக்கமதனன்மார்க்கச் செய்யசொக்கோகப்படிச்செம்மையாளனைச்சேவித்துநிற்கிறார்பார், செயகச்சிவளர்முத்துவிஜயரெங்கப்ரபலசிம்மாசனுதிபதியே. [46]

சீட்டுக்கவி.

முப்பத்துமுக்கோடிசாமிகட்கெல்லாமுதற்சாமியானசாமி, மூனிக்குமெனக்குங்குருஸ்ஸாமி, தந்தைக்குமொழிசாமிநாதசாமிமுத்துக்குமாரசாமியினுபாஸனைபெற்றமொழிதமிழ்தருஞ்சாமியின், முக்குறுணிவிக்னேஸ்பரர்கீர்த்தனஞ்செயமொழிந்திட்டவம்ஸதிலகன், மெய்ப்ரபலவம்பலத்தாடுவோர்வழிவழிவிளங்குறுதமிழ்ச்சாமியா, மெய்ச்சாமிராமசாமிக்கதையினைக்கம்பவிச்சித்ரமதுசொனிபுணன்,மெச்சுபச்சைக்கந்தசாமியெமகண்டம்விளம்பிட்டவம்சம்வந்து, மேவிடும்வாலைசரஸ்பதிசப்ரமணியகவிவேர்தன்வரவிட்டநிருபம்' துப்பனகிரச்சாமிவிக்ரமச்சாமிபாவைச்சாமிதுய்யசாமி, தோற்றுகும்பச்சாமிசந்தனச்சாமிமருடோய்சுறுப்பண்ணசாமி, சொற்சாமிதாமெலாப்வாங்கிடுஞ்சாமிமுற்றோன்றிமொழியாதசாமி, சொற்பேசிடுஞ்சாமியாம்பெரியசாமிதுரைதூயமகிழ்சொண்டுசொண்கவிப்புவியினிற்புகழ்மையாற்பெரியசாமிநன்கெய்தலானல்லசாமி, யெங்கள்சாமிக்கருணையானசெங்கோற்சாமியாவருமிறைஞ்சுசாமி,யிம்பர்மகிணின்சமுகம்வந்திடுஞ்சீட்டுக்கவிக்குநின்மனமிசைந்தே, யெறுபரிவாகனஞ்சதமெனும்பொன்னிவைகளீந்தனுப்பிடவேண்டுமே. (47)

மகாசனம்பொருந்திய ம-ா-ா-ஸ்ரீ கச்சிக்கல்யாண ரெங்ககாலாச்சன்
சோழஉடையாரென்னுந்துரையவர்கள்பேரில் வாலைசரஸ்பதி
சுப்ரமணியக்கவிச்சக்ரவர்த்திமகன் கனகசபைக்
கவிராசன் பாடிய சீட்டுக்கவி.

சித்திநற்புத்திமிகுபத்திபத்தர்க்களித்திடுமுப்மரத்ரயானைத், திசழ்வத்ரமுளகர்த்தனுக்கிளைய முத்தயன்றிகழ் கருணைகூர்வாக்கியன், செந்தமிழெனுங்கடலினைச்சுவைத்துப்புசித்தேப்பமிடுசோளமேகனு, சீலமொடுமகிமைபெறுவீரசைவத்தின்சிகாமணியெனுஞ்சிரேட்டன், எத்திசையும்வெற்றிபெறுமுத்தமிழ்க்குபகாரியெனும்வாணிபீடாசனன், இட்டலிங்கசேசனேநிட்டையாபரணனென்றேத்திடுங்கலைதுய்யவ' னிகலானகவிஞருக்குரையாணிபோல்பவனின்பகற்பனைப்பொக்கிஷம், இனைசவியையுரைசெயுங்கனகசபைகையினாலெழுதிவரவிட்டநிருபம், வெற்றிபெறுசீர்த்துஜங்கட்டியொட்டலர்கடமைவீறடக்குறுமரியனான், மெய்க்குக்களஞ்சியன் பொய்க்குப்பெரும்பகைஞன்மிகுகலைக்ஞானபீடன், விளம்பரியரஞ்சிதன் சுகுணசஞ்சிதன்கட்டநிக்ரகன்பொன்விக்ரகன், வில்லாளர்திறையிடுங்கல்யாணரெங்கதுரைவேந்தன்மகிழ்ந்துகாண்க, உத்தமகுணப்பொறியடக்கையாலிப்பூவுகந்துதாமுந்தாங்கையால்' உளபொறைமையுடைமையால் மாமணிகளேந்தலாலுன்னிணையனந்தனுமால், உலகுதனினினைநிகரொருவருரைதருவரோவொப்பிலாமெய்ப்ரதாபா, என்சபையைநாடுங்கவிக்குப்பொனொடுசோமனுதவியருள்செயவேண்டுமே. (48)

கலித்துறை.

வாளைக்குவளையையொப்பாங்கண்மாதர்மதன்பரமன்
றாளைத்தொழும்வில்விஜயன்றமிழ்வலர்தங்கட்கன்ன
நாளைக்கின்றைக்கென்றுசொல்லாமலேயெந்தநாளும்பசி
வேளைக்குதவுவன்கல்யாணரெங்கநல்விற்பன்னனே. (49)

அவ்வேளையொத்தநிசவாசன்கச்சிக்கல்யாணரெங்க
செவ்வேளயிற்கரவீரியன்வாக்கிற்செயம்படைத்தா
னிவ்வேளைமற்றொருவேளைபின்னாளையென்காமலுந்தா
னெவ்வேளையும்வந்துகேட்பதையீவனிரவலர்க்கே. (50)

நந்தார்கரத்தண்ணல்சோதரியானநறுமலர்ப்பூங்
கொந்தார்குழலியின்றன்னருளாலிக்குவலயத்தே
வந்தாதரிப்பன்புவரெங்கசாமிமனமகிழச்
சிந்தாமணிக்கச்சிக்கல்யாணரெங்கசிகாமணியே. (51)

ஈட்டும்பொருள்களிரவலர்க்காமெனவெண்ணிநிலை
நாட்டும்புகழெங்கள்கச்சியுவரங்கராஜனெனும்

பாட்டனைப்போலுநற்பாவாணருக்குப்பரிந்தனத்தை
யூட்டுந்துரைகச்சிக்கல்யாணரெங்கநல்லுத்தமனே (52)

ஆராகிலுமுனைப்போலேகொடுப்பவரம்புவியில்
நேராருமில்லைதருமசரீரநிருபரெனும்
பாராளுமன்னர்சபாசெனமெச்சும்பராக்ரமனாங்
தீராசெயகச்சிக்கல்யாணரெங்கசிகாமணியே. (53)

எந்தனமுந்தனந்தந்தனமாதலினீரப்பன்னீர்
சந்தனம்பூசித்தழுவியணையச்சமயமென்றே
வந்தனஞ்செய்தனம்வந்தேயணையமருவிடுவாய்
தந்தனஞ்செய்யலைகல்யாணரெங்கதயாநிதியே. (54)

வாராதவரெவர் பாராதவரெவர் வந்து சபை
காராதவரெவர் பாடாதவரெவர்கையினிற்பொன்
னேராதவரெவரெல்லோர்க்குங்கன்னனெனவுதித்த
தாராளனாங்கச்சிக்கல்யாணரெங்கதயாநிதியே. (55)

திருமுட்டமேவிவளர்பூவராகர்திருவருளை
யொருமிக்கவேபெற்றிங்கிந்திரன்போலவுயர்ந்தசெல்வந்
தருவொக்கவேபெற்றுவாழ்வோய்நிற்றோனைத்தழுவுறுவேன்
ஒருமுத்தந்தாகச்சிக்கல்யாணரெங்கநல்லுத்தமனே. (56)

எந்தனிளமைப்பருவத்தைவீணிலிழக்குமுன்னே
சந்தனைப்போலக்கலவிகள்செய்துகளிப்புறவே
சிந்தனைசெய்தனனென்றோதவக்கமெற்சேர்ந்தணைவாய்
சுந்தரமாங்கச்சிக்கல்யாணரெங்கசுகோதயனே. (57)

இந்திரசெல்வம்பெரிதெனயாருமிசைத்திடுவர்
அந்தரமானதென்றேயெவருமறியார்கள்கொல்லோ
மந்திரங்கால்மதிமுக்காலெனுமுழுவாழ்வடைந்தாய்
சுந்தரநேர்கச்சிக்கல்யாணரெங்கசிகாமணியே. (58)

பாரினுள்ளார்பொருளைக்கலியாணமென்றேபகர்வர்
சீரினுள்ளார்கள்மணத்தைக்கல்யாணமென்றேசெப்புவார்
ஏர்கொள்கல்யாணரெங்கேந்திரனென்னவிசைப்பதிலுன்
பேர்சொன்னபோதிலுந்தானேவந்தெய்தும்பெருஞ்செல்வமே. (59)

சனகநிறங்கொண்டதாமரையாளைப்பின்கன்னியரை
மனதுகந்தேபெற்றுளானைச்சனகனென்றேமகிழ்வர்

தினகரனுங்கச்சிக்கல்யாணரெங்கசிகாமணியே
சனகனெனச்சொலச்சந்தேகமென்னுனைச்சாற்றுவனே. (60)

மாயூரநாதனருள்பூவராகர்வரமிவையைப்
பாயிரமாகப்படைத்தேபுகழ்கொண்டபார்த்திபனே
நீயிரங்காய்கச்சிக்கல்யாணரெங்கநிருபவுனை
யாயிரம்பேருக்கொருவனென்றுருமறைறருவரே. (61)

பாட்டுக்குப்பாத்திரம்நீயன்றியாருளர்பாரின்கண்ணே
மோட்டுக்குலாமறைப்பாடிலென்றுமுழத்துண்டமுண்டா
நாட்டுக்குள்மானியமுண்டாவிலைக்குச்சுண்ணாம்புமுண்டா
நீட்டுப்புகழ்க்கச்சிக்கல்யாணரெங்கநன்னிதியனே. (62)

வெண்பா-சட்டாரிபந்தனமிது.

மாகனகயோகனேவாரிசரிபாரிநீ
யாகுமெனலாமென்றறையலா-மேகமனு
கல்யாணரெங்ககனகாசலமையா
பல்யாண்டும்வாழ்சம்பனு. (63)

இல்லையெனவொருவரெய்தியும்பாமுனைதை
யில்லையெனவேசொல்லாதீகுவாய்-வல்லையதாய்
கல்யாணரெங்ககனகாசலமையா
பல்யாண்டும்வாழ்சம்பனு.

படைகுடிகூழமைச்சுநட்பரணென்னு
மடைவாறும்பெற்றவரசே-கொடைமேவுங்
கல்யாணரெங்ககனகாசலமையா
பல்யாண்டும்வாழ்சம்பனு. (65)

ஒருகோடிகேட்டோர்க்குவந்துபலகோடி
யருகோடியீயுமரசே-தருகோடி
கல்யாணரெங்ககனகாசலமையா
பல்யாண்டும்வாழ்சம்பனு (66)

உரிமையொடுபல்லோர்க்குதவிசெயவேண்டி
யருமையறிதந்தவரசே-பெருமைமிகுங்
கல்யாணரெங்ககனகாசலமையா
பல்யாண்டும்வாழ்சம்பனு (67)

குலவிவருவோர்க்குக்கொடுப்பதுகொம்பென்று
மிலையிலையென்றேறவெறியையேயும்-பலதருவுங்
கல்யாணரெங்ககனகாசலமையா
பல்யாண்டும்வாழ்சம்பனு. [68)

பல்லென்றசமுங்கறுத்துப்பயப்பட்டுச்
செல்லென்றிடிலுருமிச்செல்லுமே-செல்லதுவுங்
சல்யாணரெங்ககனகாசலமையா
பல்யாண்டும்வாழ்சமபனு. (69)

மங்களகல்யாணகுணவஞ்சியர்கள்ரஞ்சிதனு
மங்கசனேதுங்கவகளங்கா-விங்கிதஞ்சேர்
கச்சிக்கல்யாணரெங்ககாலாட்கள்தோழாநீ
யிசசெகத்தில்வாழ்ந்துண்டிரு. (76)

மதனத்தூரில் அன்னசத்திரங்கட்டிவைத்தபோதுகச்சிரெங்கதுரையவர்கள்பேரில் வாலைசரஸ்பதிசுப்ரமணியக்கவிச்சக்ரவர்த்தி பாடியது.

திருமால்மண்ணுண்ணுமற்பவனுநஞ்சைத் தின்னுமர்செங்கமலப்பொகுட்டுவேதன், உருமாறியன்னமெனப்பறந்திடாமலுயர்மறையோர்வடிவின்வந்தேயன்னமுண்ண, கருமானேர்காதலனுங்கச்சிரெங்கக்காலாட்கள்தோழமன்னன்கருத்துவந்தே, வருமாமதனத்தூரிலன்னசத்ரம்வைத்திட்டாரெவரும்வந்துதுய்த்திட்டாரே. [71)

வேட்டையாடிவந்தபோதுபாடியபாடல்.

காட்டரசர்பலரும்வந்தேதயிதனைக்கண்டோராமன்முதற்செய்தவர்கள்பலர்களேனும், காட்டரசர்செயும்வேட்டைதனக்குமண்ணுங்கட்டிநிகராவாரோவெனவிளம்ப, வேட்டரசர்வலைகட்டிஞமலிசூழவெங்கள்கச்சிக்கல்யாணரெங்கவேந்தன், காட்டரசபுலிமுதலாம்விலங்கையெல்லாங்கலைத்திட்டார்வெட்டிவெட்டித்தொலைத்திட்டாரே. (72]

ஆனந்தபாடியிற் சத்திரங்கட்டி வைத்தபோது பாடியது.

ஆனந்தபாடியெனக்காசிக்குப்பேராதலினலதிலிறைவரானோரெல்லாந் தானந்தவங்கள் செய்யவருவார்போவார் தங்குதற்குச்சத்திரங்கள்சமைப்பார்போல, மேனந்தவொன்றனந்தமாகுமென்றுமேலாமிவ்வானந்தபாடி தன்னில், தானந்தங்கச்சிக்கல்யாணரெங்கச்சமஸ்தானபதிசத்ரஞ்சமைத்திட்டாரே. (73)

கொண்டலெனுந்தருநரத்தான்கச்சிரெங்கராசனெனுங்குபேரன்முன்னே, எண்டிசையோர்கொண்டாடுந்தீபாவளிக்குமுனமென்பிதாவாந், தண்டமிழ்ப்பாவலன் வாலசரஸ்பதிக்கோர்விராகன் வஸ்த்ரந்தந்ததின்னாள், பண்டிகையிற்றுண்டெனக்குவந்ததென்கல்யாணரெங்கபண்புள்ளோனே. [74)

நான் இராமேஸ்புரம்போகச் சிலவுக்குத்தந்தபோது பாடியது.

தேனாறுமாலைபுனைசெவ்வேளென்னுஞ்செயகச்சிக்கல்யாணரெங்கமன்னா, நானாறிலாதிராமேஸ்புரத்துநற்பதிக்கேகும்படிக்குச்சிலவுக்குப்பொன், ஞானாறுகேட்டதற்குக்களிகூரெய்திநானூறுதருவனெனநல்கலாலே, மேனாறுபருவமிகும்புகழ்தழைந்துமேனாறுவிருதுகொடிவிளங்கற்பாற்றே. (75)

வெண்ணெய்க்குந்தயிருக்குமங்காந்திட்டமேசவுருவான்போலமேதினிக்கண், டிண்ணைக்குக்காவலாயரசர்தம்மைச்செந்தமிழ்நாவலர்தம்மைச்சேரச்செய்திப், பண்ணைக்குக்கருணைசெயுமெங்கள்கச்சிக்கல்யாணரெங்கதுரைபார்த்திபாகேள், எண்ணெய்க்குங்குறைவில்லையென்றிருந்தேனுக்கிங்கெண்ணெய்க்குங்குறைவுவந்ததென்சொல்வேனே. (76)

விருத்தாசலம் சுப்பராயக்கவிராயர் மகன் முத்தாபரணக் கவிராயர்
கச்சிக்கல்யாணரெங்கதுரையவர்கள் பேரில்பாடியசீட்டுக்கவி

கொடையாளிமலையினிற்சவிமாரியனுதினங்கொண்டலெனவேபொழிபவன், குரைதிரைக்கடன்மடைதிறந்தெனவிலக்கியங்கூறுமம்ப்ரசண்டவாக்கன், கூறிடுஞ்சகலகலைஞாபகனற்கவிசுறிக்கும்ப்ரதாபசீலன், கும்பமுனியருள்பெறுவரப்ரசாதன்வாணிகொஞ்சிவிளையாடுநாவன், திடவிருத்தாசலச்சுப்பராயக்கவிஞன்சேர்ந்தவிருகண்மணியெனுஞ், சேயன்முத்தாபரணகவிராசன்மகிழ்வினொடுதேர்ந்தெழுதுசீட்டுக்கவி, செல்வியவளர்மார்பனுங்கல்வியிலனந்தனுஞ்செல்வமதிலேதனதனுந், தெரிவையர்கள்கண்டளவில்வேலனோமாரனோதிருமாலெனப்புகலுறும், அடல்மிகுந்திடுதீரனென்னலர்கள்கண்டீரனஷ்டலெட்சுமிவிலாசன், ஐந்தருவுடன்சங்கநிதிபத்மநிதியுன்றனருணோக்கியேவல்செய்ய, வணிமாடமேடையுமதிள்கோபுரங்களுமாலையந்தேர்கணிரையும், அம்புவிமடந்தைமுகமாகுமுடையாபுரிக்கரசுபுரிமன்னராகுந், தடையிலாச்சொடைமாரிபொழிகச்சிரெங்கேந்த்ரதனயனாகியமேருவாம், சந்த்ரமுகனுங்கச்சிகல்யாணரெங்கதுரைதாஷ்டிகனெதிர்ந்துகாண்க, சதிருடன்கடவுள்வாழ்த்துக்கவிதைமுப்பதுஞ்சமுகமதில்சேட்டுசேர்ந்து, சால்வைசோமன்சோடோடொருமால்சரப்பளிகடந்தனுப்பிடவேண்டுமே. (77)

இப்போது ஆள்கின்ற கச்சியுவரெங்க துரையவர்கள் பேரில்
அரண்மனைவித்துவான் கம்பராமாயணப்பிரசங்கக்
கனகசபைக்கவிராயர் பாடிய சீட்டுக்கவி.

சித்திபதிபுத்திபதிநித்யபதிகணபதித்தேவன்சகோதரபதி, ஸ்திரிமதிகொடுத்திடுந்திருவேரசப்பதிசெல்வனருள்பெறுசரஸ்பதி, செந்தமிழிலக்கிடமிலக்கணமெனச்சொலுஞ்சிந்துபதிவீரசைவத், தினபதியெனச்சொலுங்கனகசபைநாவலன்றோர்ந்தெழுதிவிட்டநிருபம், சத்ரபதிபுத்ரபதிசித்ரபதிமித்ரபதிசாஸ்த்ரபதிநேத்ரபதியாஞ், சந்தானபதியுலகுவந்தாளுநிதிபதிதகுந்தானபதியாகிய, சக்ரபதியானபொன்விக்ரகப்பதியாந்தாரபதிசிமாஜனபதி, சங்கநிதிபதுமநிதிபெற்றபதி ரதபதிகெஜாதிபதிசேனாபதி, நத்தும்பிரசித்தபதிவித்வபதிஸ்ரீபதியைநாடுறும்பிரகஸ்பதி. நரபதிகிர்பாபதிகுலாதிபதிசேதுபதிராசர்துதிசெய்திடுபதி. நற்பெருமைமிக்கவளர்மேருவிற்கொடிகட்டுராச்யசாம்ராச்யபதியா, நன்றிமகிழ்கின்றபதிகச்சியுவரங்கமகுடாதிபதிநன்குகாண்க சித்தசனைத்திகழிலட்சணமிகுந்திடுதிறச்சிங்கபதியாகிய சீர்பெற்றநின்பாட்டனார்பெற்றபுகழலாற்செப்பவேறொருவருளரோ, செகமெலாமெச்சுநின்சமுகமதுவந்திடுஞ்சீட்டுக்கவிக்கிசைந்து, சீரித்தலத்தின்புராணமதையச்சிடச்சிந்தைமகிடந்தருள்வையே. (78]

வாகைபெற்றவிருதுத்துசத்தினொடுவண்டமிழ்க்கவிவலோர்களேகாம்பரித்திரள்பீதாம்பரத்தினொடுவரிசைபெற்றதெவனுரையெனவீகைவிற்பெரியமேகமொத்தகரநாகரற்றினசிகாமணி யெங்கள்கச்சியுவரங்கமன்னவனிலங்குநாமமதையெண்ணியுஞ் சீரப்பரவைவாவியெண்ணியுமிராசலெட்சுமிதிளைப்புறச்சேரும்வண்டிபலவுருவொடுந்திகழ்செய்செல்வமோங்கியதிவாகரன் ஆகுமாக்கள்பலவாழைவேங்கைசளமைத்தவெட்சியின்மருங்கிலோரரசுநிற்குமரசின்புறத்தினெழுவத்திநிர்குமடையாளமே (79)

யானைவாங்கினபோது பாடியது.

எங்களங்கமதிலொன்றுபெற்றுளவிநாயகன்பெருமையெண்ணுதெங்களங்கமுழுதுங்கணக்குறிலியம்புதற்குவசமோவென, வங்கமானசதுரங்கமேவுறுதுதிக்கைபெற்றமணியமைவினு, லஷ்டலெட்சுமிபொருந்திமள்ளர்கையெடுத்திறைஞ்சலுறுமமைவினால் மங்களாகரமிறைஞ்சுபட்டமொடுமகரமேவுமாதங்கமா வரையைநேரவுயர்வுற்றிலங்குறுமம்பாரியானுமைவகையிலோன் றிங்குநோக்கினவர்க்கீதல்சம்மதங்கொண்டினமெனுமருவிநின்றதே யெங்கள்கச்சியுவரெங்கராஜன்முனிராஜலெட்சுமியென்யானையே. [80]

பஞ்சவர்ணக்கிளி வந்தபோது பாடியது.

தலாங்கமுற்றவர்க்குஞ்சலசமடமாதினுக்குந்தருவதன்றி
நலாங்கமாமரங்கரேழையருக்குபகாரநாளுமுண்டோ
விலாங்கமுறும்பசியகிள்ளைமன்னன்றனைநோக்கியய பல்கச்சி
யுவரங்காரங்காரங்காவேனிலங்காயிரங்காவென்றுரைக்குமன்றே
(81)

மான்வந்தபோது பாடியது.

வள்ளிமான்குஞ்சரியான்கோமான்றன்றிருவடியைவழுத்தப்பெற்றே
யள்ளிமான்மதமணியும்புயக்கச்சியுவரெங்கவரசன்றன்னை
யுள்ளிமானெனக்கருதிச்சீமான்பூமானெனவேயுறவுகொண்டு
துள்ளிமான்சவரிமான்கடம்பைமான்புள்ளிமான்சும்மாநண்ணும் [82]

வேடிக்கைப்பாவை வந்தபோது பாடியது.

உம்பர்பதியவையின்சணடனமிடுமரம்பையர்களுறவுபெற்றே
தம்பரம்பூதலம்படியாதலர்விழிகளிமையுருதாமம் ரடா
திம்பரெலாப்புகழ்ந்தேத்துங்கச்சியுவரங்கமன்னனிந்திரன்றன்
றம்பிசபையெனக்கருதிவந்தவெனப்பலபாவைசார்ந்தவன்றே. [83]

ஒட்டை வாங்கினபோது பாடியது.

செழித்திடுமொட்டகந்தான்செழுவளமிகுந்தநீதி
பழுத்துறுசிந்தைக்கச்சியுவரங்கபார்த்திபன்போல்
வழுத்துறக்காண்கிலாதுவானுலகுளரோவென்னக்
கழுத்தினைநீட்டியெட்டிப்பார்ப்பதுகடுக்குமன்றே. [84]

தீபாவளிக்குவிசாரிக்கும்போதுபாடியது.

சங்கநிதிபதுமநிதிமுதலானசெல்வந்தழைத்தவுடையார்பாளையச்சமஸ்தானமென்னும்மகமேருமலைவாசமாச்சலநிதியையுண்டுவந்து, மங்களமதாயருட்சூற்கொண்டுசெல்வாக்குமற்றயர்க்குங்கனகமா மழைபொழியுநாளின்மிடியாங்கொடையிருளேமறைப்பற்றபேர்களுக்கு, எங்கனும்விளைப்பறக்கருணைப்பெருந்தகையெனுஞ் சூறைமாருதத்தாலெனுமென்றுபரிகோடானகோடியாயீந்தேபுகழ்க்கொடிநிறீஇ, வங்காளமுதல்மெச்சுகச்சியுவரங்கனெனவாழ்வுறுங்கனகமுகிலேமகிழ்செய்கங்காஸ்தானமானதாவென்றென்றும்வாழிமிகவாழிவாழி. [85]

சங்கராந்திக்கு விசாரிக்கும்போது பாடியது.

தாமின்புறுவதுலகின்புறக்கண்டு
காமுறுதலென்றளிக்குங்கற்பகமே-சேமமிகு

பூமிபுகழ்கச்சியுவரங்கபூபால
சாமியுன்றன்பால்பொங்கிற்று. (86)

சண்முகக்குமரகுருபரனிருசரோருகத்தாளென்னுமுடிபு
னைந்தே சாஸ்திரத்துரைதருந்தேற்றமுங்கல்வியுந்தகுகாதுக
ண்ணதாகி, மண்முகம்புகழுறுமமைச்சர்பிரதானியிவர்மருவுற்
றதோள்களாகி மருமம்யாவுந்தெரியுநெஞ்சுமானேசர்சேவகர்
வயவர்கவசமாகித், தண்முகத்தோடுலந்தவர்தமக்கிருநிதிதரு
ங்துணஞ்செங்கோலதாய்த் தன்குடியெனக்குடிகளைப்புரந்தரு
ள்செயுந்தாளாண்மைதாளதாகிப், பண்முகத்திவைமையயுடை
யார்பாலையத்திற்படைத்தராசாங்கயோகப் பாலனுங்கச்சியுவர
ங்கமஹாராஜனின்பால்பொங்கல்மிகவாழியே (87)

தள்ளையெனுஞ்சீதாசமேதன்முன்னும்பின்னும்வளர்தன்
னுமத்தோ, டுள்ளவர்தம்புகழெல்லாமொருங்கிராமயணமாயுற்
றதேபோற்; கள்ளவிழும்வாகையணிகச்சியுவரங்கமன்னுகாசி
னிக்துள், பிள்ளைபிள்ளைதலைமுறைக்குநின்புகழேநிற்கப்பேர்
பெற்றையன்றே. (88)

அட்டதிசைபரவுகச்சியுவரெங்கேந்த்ராவறுநூற்றுநாற்ப
த்தைந்தாண்டுமுன்னம்; பட்டமுடனுண்டமூதாதையாரும்பா
ரதனினின்போலும்பண்பார்யாரே, துட்டர்தமைக்கட்டிமிகச்சு
யமேகட்டித்தொல்விருதுத்துஜங்கட்டித்துன்னார்தம்மை, வெ
ட்டுபுகழ்க்கொடிபடர்ந்து மேருக்கப்பால்மேலவர்க்குஞ்சட்ட
மெனமேவுமன்றே. (89)

குண்டலம்போட்டபோது பாடியது.

குண்டலத்திலிந்திரன்கற்பகத்தினிடைவாங்கலன்றிக்கோ
க்கன்னன்பாற், குண்டலத்தைவாங்கினன்கொடுத்தானென்றி
டுபுகழைக்கொண்டதுண்டோ, குண்டலமாவுற்றோர்க்குக்கொ
ண்டலெனத்தரும்விருதுகொண்டுளோய்பொற், குண்டலந்தந்
தனைகச்சியுவரங்கமன்னபுகழ்நிலவுவாயே. (90)

விடையேறும்பரமனுக்குக்கோபுரமும்படித்துறையும்விள
ங்கக்கட்டும்; படையாருமுன்கச்சியுவரங்கமன்னனெனும்பா

டன்போல, விடையாகுமன்னவர்களென்னபுகழினைப்பெற்றா ரிலங்கும்வண்ணம்; அடையாளக்குண்டலந்தந்தனை கச்சியுவரங்கவரசரேறே. (91)

கோடிகோடியுலோபியருக்கெலாங்கொடுத்துக்காட்டுங்குணப்பெருங்குன்றனே, வீடில்கச்சியுவரங்கமன்னன்றானேத்திடுங்கவிவாணருக்கீவது, கோடிகோடியெனச்சொலவேபலகோடிகோடிகொடுக்குந்தகமையா, னுடிவிக்கொடைக்கிடெனவேயெந்தநாட்டினுண்டெனநன்குமதிப்பரே. (92)

திருக்கிளருமரண்மனைமுப்பத்திரண்டுகட்டமருங் திரண்டொருங்கே, யிருக்குதலாலரங்கவிலாசப்பெயர்க்கல்யாணமாளெழிலைக்காண; வுருக்குமணியொடுகிஷ்ணன்றுவாரகையைவிட்டிங்கேயுறைதலாலே, நெருக்குறு கோவர்த்தனத்தின்குடையெனப்பொற்கொடையொன்றுநேர்ந்ததன்றே. (93)

இந்திரன்றன்சபையானசுதன்மையுமந்தரத்தொளிப்பவிசன்றேழன்; மந்திரிதன்சபையானவளகைநகர்வடக்கென்னுமாநாட்டோடச், செந்திருவாழ்கச்சியுவரங்கமன்னன்புதுப்பித்துச்சிறப்பமைந்த, சுந்தரஞ்சேர்கல்யாணமாலினுக்குநேரெவற்றைச்சொல்லற்பாற்றே. (94)

ஆயிரங்கண்ணுடையுற்றேயயிராவதத்தினையேற்றண்டங்காத்து, மீபுபரஞ்சுதன்மைத்தாய்புலவர்புகழ்பெருமைத்தாய்வீபுலைமெய்ப்ப, மேபசயந்தனைப்பெற்றுங்கேட்டதையிந்திராணியெய்துமேன்மைநோக்கி, னுபகனிந்திரன்போலுங்கல்யாணமாலழகென்னவிலுவேனே. (95)

நவக்ரகப்ப்ரதிட்டை செய்தபோது பாடியது.

அந்நாளிற்றயரதன்றன்சனிப்பதிட்டைநாகையினிலமைத்தலாலே, பொன்னுளிபானரகுராமனைப்பெற்றெத்திருவும்பொகிந்துற்றானே; பின்னுளொன்பதின்மரையும்பதிட்டைசெய்தகச்சியுவரெங்கவேந்த; லெந்நாளு[illegible]மெலாம்பலித்துமகாராசனெனவிருந்துவாழ்க. (96)

முற்றும்.

147069

5A
5-73